4 மாநிலங்களுக்கும் சேர்த்து, பெங்களூரில் மொழிப் பயிற்சிக்கூடம் ஒன்று இருந்து வருகிறது. இந்திய அரசாங்கம் அதற்கு உதவித் தொகை அளிக்கிறது. எந்தெந்த நூல்கள் கொண்டுவரப்பட்டன, அந்த நூல்களின் ஆசிரியர்களுக்கு எவ்வளவு தரவேண்டும், இங்கே இருக்கிற ஆசிரியர்களைக் கொண்டு எந்தெந்த நூல்களை இயற்ற வேண்டும் அல்லது எந்தெந்த நூல்களை மொழி பெயர்க்க வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்வதற்காக அந்த மாநாடு கூட்டப்பட்டது.

THIRU G. VASANTHA PAI : Was the question of retention of English on Zonal basis taken into consideration in the Conference?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய ஒரு முடிவுமில்லை. ஆகவே வட்டார மொழிகளிலே பாட நூல்களைக் கொண்டு வருவதுதான் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம். எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்த மொழிகளிலே எந்த அளவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன; எந்த அளவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பது ஆராயப்பட்டது. ஆங்கிலம் நீடித்து இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பது அந்தந்த மாநிலங்களின் தனிக்கொள்கையைப் பொறுத்தது.

Link Roads for Village Panchayats

* 32 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal with the Government to sanction special financial assistance to Village Panchayats for laying link roads?

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இணைப்புச் சாலைகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துவதற்கு விசேஷ நிதி உதவி அளிக்க அரசாங்கத்திடம் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.